கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்
மறை வளர ஒன்றிணைவோம்

# தாய்

கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997



2025

பங்குனி - ஆடி | தாய்-28 | சேய்-168



## கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர்

## அதி வணக்கத்திற்குரிய மல்கம் கர்தினால் ரஞ்ஜித்

## ஆண்டகை அவர்களின் குருத்துவ பொன்விழா கொண்டாட்டம்

## 30.06.2025

வெளியீடு - கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம். (0094) 777 289960 விலை-60/-

# திருத்தந்தை பதினான்காம் லியோ (*Leo XIV*)
## (பதினான்காம் சிங்கராயர்)




இயற்பெயர்: இராபர்ட் பிரான்சிசு பிரீவோஸ்ட், (Robert Francis Prevost), பிறப்பு: (14 செப்டம்பர் 1955).
கத்தோலிக்கத் திருஅவையின் தலைவரும், வத்திக்கான் நகர அரசின் இறையாண்மையாளரும் ஆவார்.
திருத்தந்தை பிரான்சிஸ் மறைந்ததைத் தொடர்ந்து, 2025 மே 8 அன்று நடைபெற்ற மாநாட்டில் இவர் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இலினொய், சிகாகோவில் பிறந்த இவர் அகத்தீனியத் துறவி ஆவார்.

பெருவில் 1985 முதல் 1986 வரையும், பின்னர் 1988 முதல் 1998 வரையிலும் பங்கு குருவாகவும், மறைமாவட்ட அலுவலராகவும், குருமட ஆசிரியராகவும், மறைமாவட்ட நிர்வாகியாகவும் பணியாற்றியுள்ளார். 2023இல் கர்தினாலாக இவர் நியமிக்கப்பட்டார். ஆயர்களுக்காக திருப்பீட பேராயத்தின் தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவுக்கான திருப்பீடக் குழுவின் தலைவராகவும் 2023 முதல் இவர் பணியாற்றி வருகின்றார். சிக்லேயோ மறைமாவட்ட ஆயராக 2015 முதல் 2025 வரையிலும், 2001 முதல் 2013 வரை அகுஸ்தினார் சபையின் மாநிலத் தலைவராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

2025 மே 8 அன்று, பதினான்காம் லியோ (பதினான்காம் சிங்கராயர்) என்ற ஆட்சிப்பெயரை ஏற்று திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவில் பிறந்த இவர் ஒரு பெரு குடிமகனும் ஆவார்.



நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார்;

# தாய்

THA A I

## எமது எண்ணம்

**March - July 2025**
**P.O. Box: 1233, Colombo**
**Mobile: 077 7289960**
**e.mail:anandapulle@yahoo.com**
**anandapulle@hotmail.com**
**www.colombostjosephvazmandram.lk**


உத்தரிய மாதா பக்தியானது 1251ஆம் ஆண்டு புனித சைமன் ஸ்டாக் என்பவருக்கு அன்னை மரியாள் காட்சி கொடுத்ததோடு ஆரம்பமாகியது. இவ் உத்தரிய பக்தியிலே அன்னை மரியாளுடைய வாக்குறுதியானது "உத்தரியத்தை அணிந்து கொண்டு இறப்பவர்கள் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவார்கள்" உத்தரியம் என்பது அன்னை மரியாளின் பாதுகாப்பின் ஒரு அடையாளமாகும். உத்தரியம் அணியும் போதெல்லாம் நாம் அன்னை மரியாளின் பாதுகாப்பையும், அரவணைப்பையும் தீமைகளிலிருந்து விடுதலையும் பெறுகின்றோம் என்பது திருச்சபையின் இறை மக்களின் அனுபவமாகும். ஆகவே தான் திருச்சபையானது நாம் தேவ நற்கருணை என்னும் திருவருட் சாதனத்தை பெறுகின்ற போது உத்தரியம் அணிவிக்கும் வழக்கத்தை கொண்டுள்ளது.

இவ்வாறாக தேவ நற்கருணை எனும் திருவருட்சாதனத்தை பெறும் போது உத்தரிய ஆடையை பெற்றுக் கொள்ளும் நாம், தொடர்ச்சியாக உத்தரியத்தை எமது கழுத்தில் அணிகின்றோமா? ஏனையோர் உத்தரியத்தை அணிய உற்சாகப்படுத்துகிறோமா? ஒருவேளை நாம் பாவித்த உத்தரியம் அறுந்தோ, உடைந்தோ அல்லது காணாமல் போயிருந்தாலோ சிரமம் பாராமல் உடனடியாகவே இன்னொரு புதிய உத்தரியத்தை வாங்கி கழுத்தில் அணிந்து கொள்வோம். உத்தரிய பக்தியை எமது குடும்பத்திலும், நண்பர்கள் மத்தியிலும், உறவினர்கள், அயலவர்கள் மத்தியிலும் பரப்புவோம், நரக நெருப்பிலிருந்து எம்மை பாதுகாப்போம்.

மேலும் கடந்த 12 வருடங்களாக திருச்சபையை வழி நடத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து கொள்வதோடு, அவரது சிறப்பு பணிக்காக ஆண்டவருக்கு நன்றி கூறி, அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம். தொடர்ந்து எமது கத்தோலிக்க திருச்சபையின் தலைமை ஆயர் பொறுப்பை ஏற்று இருக்கும் இந்நாள் திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களின் உடல் உள ஆன்மீக நலத்துக்காகவும், திருச்சபையை இறைத்திட்டத்திற்கு அமைய வழிநடத்த வேண்டிய ஞானமும், இறை அருளும் நிறைவாக அவருக்கு கிடைக்க வேண்டும் என்று மன்றாடுவோம்.

அத்தோடு இவ்வாண்டு தனது குருத்துவ விழாவில் பொன்விழா காணும் எமது கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் அதி வணக்கத்திற்குரிய மெல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகைக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவருடைய உடல், உள, ஆன்மீக நலத்துக்காக மன்றாடுவோம்.


## தாய் நிர்வாகம்

**பிரதம ஆசிரியர்**
அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே
: 0777 289960

**ஆசிரியர்**
அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ
: 0770 090005

**சஞ்சிகை நிர்வாகம்**
திருமதி. டயனா ரமேஸ் - : 0775 594399
JVM சிரேஷ்ட பெண்கள் குழு

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**
திரு. எனஸ்டன் பெர்னாண்டோ - : 0774 985940
: enestons@gmail.com

**துணை ஆசிரியர்கள்**
திருமதி சுமதி கோமஸ் - : 0773 672113
திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ - : 0777 781275

**கணனி வடிவமைப்பு**
திரு. பேடினன்ட் டிவோட்டா

**இணையத்தளம்**
**www.colombostjosephvazmandram.lk**


உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது.

# திருத்தந்தையின் “ஊர்பி எத் ஓர்பி” சிறப்புச்செய்தி

ஒவ்வோர் ஆண்டும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா மற்றும் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா என்னும் இரு முக்கிய நாள்களில், திருத்தந்தையர், வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலின் நடுமாடத்திலிருந்து,

***“ஊருக்கும் உலகிற்கும்”*** எனப் பொருள்படும் “ஊர்பி எத் ஓர்பி” (Urbi et Orbi) என்ற சிறப்புச் செய்தி, மற்றும் வாழ்த்துக்களை வழங்கி வருகின்றனர். 13-ஆம் நூற்றாண்டில் திருத்தந்தை பத்தாம் கிரகோரி அவர்களின் தலைமைப்பணி காலத்தில் தொடங்கப்பட்ட, “ஊர்பி எத் ஓர்பி” சிறப்பு ஆசீர் வழங்கும் பழக்கமானது இன்று வரை நடைமுறையில் இருந்து வருகின்றது. அதன்படி மக்களுக்கு தனது “ஊர்பி எத் ஓர்பி” சிறப்புச் செய்தியை மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கினார் . திருத்தந்தைக்கு பதிலாக திருத்தந்தையின் வழிபாட்டுக் கொண்டாட்டங்களுக்கான தலைவர் பேராயர் ஜொவான்னி தியேகோ ரவெல்லி அவர்கள் வாசித்தார்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், அல்லேலூயா!

அன்பான சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!

இன்று நமது ஆலயங்களில் அல்லேலுயா வாழ்த்தொலி எதிரொலிக்கிறது, அது வாயிலிருந்து வரும் வார்த்தையாக மட்டுமல்லாமல் இதயத்திலும் எதிரொலிக்கிறது, மேலும் அது உலகம் முழுவதும் உள்ள இறைமக்களுக்கு ஆனந்தத்தின் கண்ணீரைக் கொண்டுவருகிறது. எருசலேமில் உள்ள வெறுமையான கல்லறை நமக்கு சிலுவையில் அறையப்பட்டு உயிர்விட்ட இயேசு இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் கல்லறையில் இருப்பவர் அல்ல மாறாக வாழ்பவர் என்பதை எடுத்துரைக்கின்றது. வெறுப்பை வென்றது அன்பு, இருளை வென்றது ஒளி, பொய்யை வென்றது உண்மை, பழிவாங்குதலை வென்றது மன்னிப்பு. தீமை என்பது நமது வாழ்விலிருந்து மறைந்துவிடவில்லை, அது நம் வாழ்வின் இறுதி வரை இருக்கும். ஆனால் கடவுளின் அருளை வரவேற்று ஏற்பவர்களின் வாழ்வில் அது ஒருபோதும் அதிகாரமும், ஆதிக்கமும் செலுத்தாது.



துன்பம், வலி மற்றும் வேதனையில் இருக்கும் சகோதர, சகோதரிகளின் அமைதியான அழுகை கேட்கப்பட்டுள்ளது, ஒருவர் விடாது உங்கள் எல்லாரின் கண்ணீர் அனைத்தும் சேமிக்கப்பட்டுள்ளது. உலகின் தீமை அனைத்தையும் இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தின் வழியாக அவர் மீது சுமத்தினார் தந்தை கடவுள். ஆனால், இயேசு தனது எல்லையற்ற இரக்கத்தினால் அனைத்து தீமைகளையும் முறியடித்தார். மனித இதயத்தை நஞ்சாக்கி, வன்முறையையும், ஊழலையும் எங்கும் விதைக்கும் அலகையின் பெருமையை அவர் ஒழித்தார். கடவுளின் செம்மறி வெற்றி பெற்றார்! அதனால்தான் இன்று நாம், “நமது எதிர்நோக்கான கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்!” என்று மகிழ்வுடன் எடுத்துரைக்கின்றோம்.
எதிர்நோக்கின் அடித்தளமாகிய



இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்து மாட்சிமை அடைய வேண்டும்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்வானது, எதிர்நோக்கு என்பது இனி ஒரு மாயை அல்ல, சிலுவையில் அறையப்பட்ட இயேசு உயிர்த்தெழுந்தார் என்னும் ஏமாற்றமடையாத எதிர்நோக்கினை நமக்கு எடுத்துரைக்கின்றது. இந்த எதிர்நோக்கானது தவிர்க்கப்பட வேண்டியதல்ல. மாறாக, சவாலான ஒன்று. அந்நியப்படுத்துவதில்லை, மாறாக அதிகாரம் அளிக்கிறது.
கடவுள் மேல் நம்பிக்கை கொண்டவர்கள், தங்களது பலவீனமான கரங்களை அவரது வலிமையான கரத்தில் வைப்பதன் வழியாக, தங்களையே உயர்த்தி மீண்டும் எழுந்து புறப்படவும், தங்கள் வாழ்வை வாழவும் அனுமதிக்கிறார்கள். உயிர்த்தெழுந்த இயேசுவுடன் சேர்ந்து அவர்கள் எதிர்நோக்கின் திருப்பயணிகளாக, அன்பின் வெற்றியின் சாட்சிகளாக, ஆயுதமற்ற வாழ்வின் ஆற்றலின் சான்றுகளாக மாறுகிறார்கள்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்! இந்த அறிவிப்பில் நமது இருப்பின் முழு அர்த்தமும் அடங்கியுள்ளது. இது மரணத்திற்காக அல்ல, வாழ்விற்காக உருவாக்கப்பட்டது. உயிர்ப்பு என்பது வாழ்க்கையின் விழா. கடவுள் நம்மை வாழ்வதற்காகப் படைத்தார், மனிதகுலம் மீண்டும் உயர வேண்டும் என்று விரும்புகிறார். அவரது பார்வையில் ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பற்றது. முதியவர்கள் அல்லது நோயாளிகளாக, தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தைகளாக பல நாடுகளில் மக்கள் நிராகரிக்கப்படுகின்றனர்.
போரினாலும், வன்முறையினாலும் ஒவ்வொரு நாளும் நிகழும் பல இறப்புக்களை நாம் காண்கின்றோம். இத்தகைய வன்முறையினை நாம் நமது குடும்பங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராகக் காண்கின்றோம். சில சமயங்களில் பலவீனமானவர்கள், ஓரங்கட்டப்பட்டவர்கள், புலம்பெயர்ந்தோர் மீது வெறுப்பும், அவமதிப்பும் காட்டப்படுவதைக் காண்கின்றோம்.

இந்நாளில், நாம் ஒருவர் மற்றவரிடம் நம்பிக்கை கொள்வோம். நமக்கு நெருக்கமாக இல்லாதவர்களிடம் அல்லது தொலைதூர நாடுகளில் வாழ்கின்ற நமக்கு மிகவும் அறிமுகமில்லாத, வேறுபட்ட பழக்க, வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், கருத்துக்கள் கொண்ட அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்ற நம்பிக்கையை நம்மில் வளர்த்துக்கொள்வோம்.

**அமைதிக்காக செபிப்போம்**

அமைதி சாத்தியமானது என்ற நம்பிக்கைக்கு நாம் திரும்புவோம். கத்தோலிக்கர்களும் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்களும் இணைந்து இந்த ஆண்டு முதல் ஒரே நாளில் கொண்டாடும் இந்த உயிர்ப்பின் பெருவிழா நாளில், புனித கல்லறை, உயிர்ப்பின் ஆலயம் முதல் புனித பூமி மற்றும் உலகம் முழுவதும் அமைதியின் ஒளி பரவட்டும். துன்புறும் பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரயேலில் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுடன் எனது உடனிருப்பை வெளிப்படுத்துகின்றேன். பயங்கரமான மோதல்கள், தொடர் மரணம், அழிவு போன்றவற்றை உருவாக்கி, இழிவான மனிதாபிமான சூழ்நிலையை ஏற்படுத்தி வரும் காசா பகுதி மக்களுக்காகவும் செபிக்கின்றேன். போர் நிறுத்தம் ஏற்படவும், பணயக்கைதிகள் விடுதலை செய்யப்படவும், பசியால் வாடுகின்ற, அமைதியான எதிர்காலத்தை விரும்புகின்ற மக்களுக்கு உதவி செய்யவும் போரில் ஈடுபடுபவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

லெபனான் மற்றும் சிரியாவில் உள்ள கிறிஸ்தவ சமூகங்களுக்காக செபிப்போம். அன்பான மத்திய கிழக்கின் கிறிஸ்தவர்கள், போர் காரணமாக உலகில் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடிகளில் ஒன்றை அனுபவித்து வரும் ஏமன் மக்கள் அனைவருக்காகவும் செபிப்போம்.

**துன்புறும் உக்ரைன் மக்களுக்காக**

உயிர்த்தெழுந்த கிறிஸ்து துன்புறுத்தப்பட்ட உக்ரைனில் உயிர்ப்பின் அமைதியைக் கொடையாகப் பொழிவாராக, தெற்கு கவுகாஸில் மிகவும் விரும்பப்படும் நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும் வகையில், அர்மீனியாவிற்கும், அஜர்பைஜானுக்கும் இடையே ஓர் இறுதி அமைதி ஒப்பந்தம் விரைவில் கையெழுத்திடப்பட்டு, செயல்படுத்தப்படுவதற்காக செபிப்போம். உயிர்ப்பின் ஒளி மேற்கு பால்கன், கொங்கோ ஜனநாயகக் குடியரசு, சூடான் தென் சூடான், சஹேல், ஆப்பிரிக்காவின் கொம்பு (Horn of Africa) கிரேட் லேக்ஸ் ஆகிய பகுதிகளில் வன்முறை மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைதியையும், ஆறுதலையும் வழங்கட்டும். பிளவுகளை உருவாக்குகின்ற, அரசியல் மற்றும் பொருளாதார விளைவுகளால் நிறைந்த தடைகளை உடைக்கவும், ஒருவருக்கொருவர் அக்கறை கொள்ளவும், நல்லிணக்க ஒற்றுமையை அதிகரிக்கவும், ஒவ்வொரு மனிதனின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை வளர்க்கவும் உயிர்ப்பின் ஒளி நம்மைத் தூண்டுகிறது.

இந்த நேரத்தில், பல ஆண்டுகளாக ஆயுத மோதல்களாலும், நிலஅதிர்ச்சியினாலும் பாதிக்கப்பட்டுள்ள மியான்மார் மக்களுக்கு உதவ நாம் தவறக்கூடாது. பாதிக்கப்பட்டவர்களுக்காகவும், அவர்களின் அன்புக்குரியவர்களுக்காகவும் நாம் செபிப்போம். மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைத்து தாராள மனப்பான்மை கொண்ட தன்னார்வலர்களுக்கும் நன்றி கூறுவோம். நாட்டில் பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்பட்ட போர்நிறுத்தம் மியான்மார் முழுவதற்குமான நம்பிக்கையின் அடையாளமாக விளங்குகின்றது. உலகில் உள்ள அரசியல் தலைவர்கள் தேவையிலிருப்பவர்களுக்கு உதவவும், பசியை எதிர்த்துப் போராடவும், வளர்ச்சியை ஊக்குவிக்கும் முன்முயற்சிகளை வளர்க்கவும், கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன். அமைதியின் "ஆயுதங்களாகிய" இவைகள் மரணத்தை விதைப்பதற்குப் பதிலாக, எதிர்காலத்தைக் கட்டியெழுப்புகின்றன.

பொதுமக்கள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்கள் ஆகியோர் தாக்கப்படும் இலக்குகள் அல்ல, மாறாக ஆன்மா மற்றும் மனித மாண்பு கொண்ட மக்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த ஜூபிலி ஆண்டில், போர்க் கைதிகளையும் அரசியல் கைதிகளையும் விடுவிக்க உயிர்ப்பு ஒரு நல்ல வாய்ப்பாக அமையட்டும்!

**அன்புள்ள சகோதர சகோதரிகளே,**

கடவுளுடைய உயிர்ப்பில், மரணமும் வாழ்க்கையும் ஒன்றையொன்று எதிர்கொண்டன, கடவுள் இப்போதும் என்றென்றும் வாழ்கிறார். ஆயுதங்களின் சத்தமும், மரணத்தின் எதிரொலிகளும் இனி கேட்கப்படாத வாழ்க்கையில் பங்கேற்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்ற உறுதியை நம்மில் விதைக்கிறார். "இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்" என்று கூறிய உயிர்த்த இயேசுவில் நம்மை ஒப்படைப்போம். அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்!

இவ்வாறு திருத்தந்தையின் "ஊர்பி எத் ஓர்பி" சிறப்புச்செய்தியை பேராயர் ஜொவான்னி தியேகோ ரவெல்லி அவர்கள் எடுத்துரைத்தார். அதன்பின் அனைவருக்கும் தனது சிறப்பு ஆசீரை திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கினார். இறுதியில் திறந்த வாகனத்தில் அமர்ந்தபடி வத்திக்கான் வளாகத்தில் உள்ள மக்கள் நடுவே வலம் வந்து இறைமக்களை வாழ்த்தினார்.

**– திருத்தந்தை பிரான்சிஸ் –**

# திருப்பலியில் இறைவார்த்தை வழிபாடு

நாம் ஏற்கெனவே அறிந்துள்ளபடி, திருப்பலியில் தொடக்கச் சடங்குகளை அடுத்து வருவது இறைவார்த்தை வழிபாடு (Liturgy of Word) ஆகும். இதை எப்படிக் கொண்டாடுவது என்பதை இப்போது சற்றுத் தெளிவாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்வோம்.



- தம் போதனைக்குப் பிறகு, பேதுரு திருமுழுக்கு அளித்தல். (திப 10:44-48)
- அதுபோல பவுலும் தம் போதனைக்குப் பிறகு, திருமுழுக்கு அளித்தல். (திப 19:4-5)
- மேலும் எம்மாவு சீடர்கள்உயிர்த்த ஆண்டவர் இயேசுவை, அவரது போதனையிலும் “அப்பம் பிடுதலிலும்” கண்டு கொள்ளல். (லூக் 24:13-31)

# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி

**(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய “திருவழிபாடு ஓர் அறிமுகம்” என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)**

### 1. இறைவார்த்தையின் தேவை

ஒவ்வொரு அருள்சாதனக் கொண்டாட்டத்திற்கும் அடிப்படையாக அமைந்திருப்பது இறைவார்த்தை வழிபாடு. ஏனெனில் இதுவே அருள்சாதனக் கொண்டாட்டத்தைப் புரிந்து கொள்ளவும், அதில் பொருளுள்ள முறையில் பங்குகொள்ளவும் உதவுகிறது. இல்லை என்றால், எந்த ஓர் அருள்சாதனமும் பொருளற்ற வெற்றுச் சடங்கு ஆகிவிடும்.

இதற்கு எடுத்துக்காட்டாக, தொடக்கத் திருச்சபையில் திருத்தூதர்கள் காலத்தில் நடந்ததை நினைவுகூர்வது நல்லது. அதாவது, நற்செய்தி அறிவிப்பில்லாமல் அவர்கள் திருமுழுக்கு அளித்ததாகப் புதிய ஏற்பாட்டில் ஓர் இடத்தில் கூட நாம் காண முடியாது. ஏனெனில் இறைவாக்கு அறிவிக்கப்படும்போதும், அது விளக்கப்படும்போதும் விசுவாசம் ஏற்படுகிறது அதுவே திருமுழுக்கு போன்ற அருள்சாதனங்களைப் பெறச் செய்கிறது.

**சில எடுத்துக்காட்டுகள்:**

- பிலிப்பின் போதனையும், எத்தியோப்பிய நிதியமைச்சர் திருமுழுக்கு பெறுதலும். (திப 8:35-38)



இவ்வாறு முதல் நூற்றாண்டில் இருந்தே, திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தில் **“இறைவார்த்தை வழிபாடும்” “அருள்சாதன வழிபாடும்”** ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன.

*இறைவார்த்தை வழிபாடு*

↓

*விசுவாசம்*

↓

*அருட்சாதன வழிபாடு*



தொடரும்......

# செவிமடுத்தல் ஒரு கலையே



மனித வாழ்க்கையில் பல நூறு கலைகள் பற்றி பேசுகின்றோம். சமைத்தல் தொடக்கம் சாதித்தல் வரை பல கலைகள் உள்ளன. உடன் பயணித்தலில் செவிமடுத்தலும் மிக முக்கியமானது. எம் அருகில் இருப்போரின் அனுபவங்களுக்கும், உணர்வுகளுக்கும், எண்ணங்களுக்கும் செவிமடுத்தல் அவசியமானது. சிறப்பாக எமது கடவுள் அனுபவத்தைப் பகிர்வதும், செவிமடுப்பதும் முக்கியமாகின்றது.

எமது ஆன்மீக வாழ்வில் இறைஅனுபவத்தை பகிர்வதும், பகிர்வுகளுக்கு செவிமடுப்பதும் பற்றி இங்கு அலச முனைகின்றோம். பொதுவாக பிறரோடு உறவுகொள்வதில் அவர்களுடைய உரையாடல்களுக்கு என்ன பதில் சொல்லலாம் என்பதே எம்மில் பலருக்கு இருக்கும் ஒரு சோதனை ஆகும். என்ன ஆலோசனை கொடுக்கலாம் என்பதை விட, அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை கேட்பதும் ஆழமாக செவிமடுப்பதும் அவசியமாகின்றது.

எமது தொடர்பாடலில் குறைத்துப் பேசவும், கூடுதலாக செவிமடுக்கவும் எம்மை நாமே பயிற்றுவிக்க வேண்டிய தேவை உள்ளதை உணர்வோம். ஒருவருக்கு செவிமடுக்கும் போது அவர் எம்மோடு பகிர்ந்த விடயத்தை இரகசியம் பேணுதல் மிக முக்கியமானது. ஒருவர் தன்னுடைய இறை அனுபவத்தை தனது தனிப்பட்ட வாழ்வின் போராட்ட அனுபவங்களை எம்மோடு பகிரும் போது அதனை அதி முக்கிய கவனம் எடுத்து பிறரோடு பேசாது அல்லது விவாதிக்காது இருப்பது பிரதானமானதாகும்.

ஆன்மீக வாழ்வின் வளர்ச்சியில் எமது இறை அனுபவங்களை பகிரும் போது அது எமது அனுபவங்களை ஆழம் பெறச் செய்வதோடு, பிறரது வாழ்விலும் அது ஒரு தூண்டுதலாக அமைகின்றது. அவர்களை போல நாமும் இறைஅனுபவம் பெற வேண்டும் எனும் தூண்டுதலை அடைகின்றோம். ஒரு தடவை என் வாழ்வில் ஏற்பட்ட இறை அனுபவம் ஒன்றை பகிர்ந்த பொழுது அந்த அனுபவத்தை மீளவும் ஒரு தடவை நான் மீள் ஆழம் பெறச் செய்ததோடு, செவிமடுத்த என் நண்பரையும் அவ் அனுபவத்தை நானும் பெறவேண்டும் எனும் தூண்டுதல் பெற்றதை உணர்ந்தேன். இறைவனின் துணைக்கரம் எவ்வாறு என்னை வழிநடத்தியது என்று அவரும் உணரவும், அதனை தானும் பெறவேண்டும் எனும் தூண்டுதல் பெற்றதை உணர முடிந்தது.

எம்மில் பலர் செவிமடுக்க முடியாதவர்களாக இருப்பதை நாம் அறிகின்றோம். கணவனுக்கு செவிமடுக்க முடியாத துணைவியரையும், பிள்ளைகளுக்கு செவிமடுக்க முடியாத பெற்றோரையும், குழும அங்கத்தவருக்கு செவிமடுக்க முடியாத தலைவர்களையும், பணியாளர்களுக்கு செவிமடுக்க முடியாத பொறுப்பாளர்களையும் அன்றாடம் நாம் காணுகின்றோம். பிறரின் உணர்வுகளுக்கும், உரையாடல்களுக்கும் செவிமடுப்பவரே உண்மையான துணைவராக, பெற்றோராக, பொறுப்பாளர்களாக, தலைவர்களாக இருப்பர். செவிமடுப்பவரே ஊக்கம் கொடுப்பவராக, உருவாக்குபவராக, வழிகாட்டியாக இருப்பர் அல்லது மாறுவர்.

அதிகம் அதிகம் ஒருவருக்கு அல்லது பலருக்கு செவிமடுக்க ஆரம்பிக்கும் போது சுய முனைப்பு அற்றவராக, பிறர் நலன் பேணுபவராக நாம் மாற்றம் பெறுகின்றோம். செவிமடுத்தல் ஆலயமாகும் போது, எம்மோடு பயணிப்பவர்கள் ஆரோக்கியமானவராகவும், அற்புதமானவர்களாகவும், அக விடுதலை பெற்றவராகவும் மாறுகின்றனர், மாற்றுகின்றனர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

**அருட்பணி. சி . லீயோ ஆம்ஸ்ரோங்
சில்லாலை பங்குத்தந்தை.**

அஞ்சாதே; பேசிக்கொண்டேயிரு நிறுத்தாதே ஏனெனில், நான் உன்னோடு இருக்கிறேன்.

# மரியே வாழ்க!
## சேனையாளரின் அடிப்படை கடமைகள்

பொதுவாக மரியாயின் சேனை உலகெங்கும் பரந்து விரிந்து கிடக்கும் ஒரு சங்க அமைப்பாக உள்ளது. இதற்கு தலைமை தாங்குபவள் திருச்சபையின் தாயாம் அன்னை மரியாள் ஆவாள்.

ஒரு சேனையின் அங்கத்தவராக இருக்கின்றவருக்கு சேனையின் அடிப்படை கடமைகள் என்று ஒன்று உண்டு.



அதாவது:

1. வாரந்தோறும் நடைபெறும் பிரசீடியக் கூட்டங்களுக்கு நேரம் தவறாது முறைப்படி வருகை தந்து தாங்கள் செய்த வேலைகள் பற்றி போதிய அளவு விளக்கமாக எல்லோரும் கேட்கக்கூடிய வகையில் வாய்மொழியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

2. நாள் தோறும் சங்கிலிச் செபத்தை சொல்ல வேண்டும்

3. விசுவாச மனப்பான்மையோடு கன்னிமரியாவோடு ஒன்றித்தும் சேனைக்குரிய தகுதியான ஏதேனும் செப ஊழியம் புரிய வேண்டும், தாங்கள் யாருக்காக உழைத்திருகிறார்களோ அவர்களிலும் தங்கள் உடன் தொண்டர்களான ஏனைய சேனையாளரிலும், கிறிஸ்து நாதரையே காணவேண்டும், மரியா கிறிஸ்து நாதருக்கு எவ்வாறு பணிபுரிந்து வந்தாரோ அவ்வாறே சேனையாரும் இவர்களுக்கு பணிபுரிய வேண்டும்.

4. கூட்டங்களில் விவாதிக்கப்படும் கருத்துக்களையும் சேனை ஊழியத்தின் பொழுது துளியும் அந்தரங்கமான தகவல்களையும் வெளியிடாமல் மிகவும் இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். இந்த அறிவுரையை மேற்கொண்டு சேனையார் கடமையாற்ற வேண்டும், அத்துடன் மரியன்னையின் குணாதிசயங்களை சேனையாரின் மனதில்கொண்டு தங்கள் குடும்பங்களிலும் கடமை, கட்டுப்பாடு பொறுமையுடன் வாழ வேண்டும்.

**நீர்கொழும்பு கியூரியாக்கள்**

# “ஆவியில் நிறைவோம்” பாடல் தியானம் - 2025



கொழும்பு உயர் மறை மாவட்ட கத்தோலிக்க தமிழ் இளைஞர் மன்றம் தன் புதிய கன்னி முயற்சியாக ஒரு பாடல் தியானத்தை ஏற்பாடு செய்தது.

கொழும்பு உயர் மறை மாவட்டத்தில் 42 பங்குகளில் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்கள் வாழ்கின்றனர் அதே போல் இவ் ஆலயங்களில் ஞாயிறு தமிழ் திருப்பலி நடைபெறுவது உண்டு. இப் பங்குகள் பலவற்றில் இருந்து பங்குத் தந்தைகளினால் அனுப்பி வைக்கப்பட்ட இளைஞர் யுவதிகளை கொண்டே இந்த மறை மாவட்ட இளைஞர் மன்றம் நடைபெற்று வருகிறது. இவ் வருடம் இவ் இளைஞர்கள் ஒரு புதிய நிகழ்வை பரீட்சித்து பார்க்க முன் வந்தனர். அது தான் **“பாடல் தியானம்”** எனும் நிகழ்ச்சி. ஐந்து பங்குகளில் இருந்து ஆலய பாடல் குழாம்களை அழைத்து, அவர்களுக்கு பாடல்களை பிரித்துக் கொடுத்து ஆயத்தமாக்கி, ஆனி மாதம் 10ம் திகதி மாளிகாவத்தை சமாதானத்தின் இராக்கினி ஆலயத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது.

தெமட்டகொடைப் பங்கு, செக்கடித்தெருப் பங்கு, கிராண்ட்பாஸ் பங்கு, புதுக்கடைப் பங்கு அதேபோல் மாளிகாவத்தைப் பங்குகளில் இருந்து பாடல் குழாம்கள் அழைக்கப்பட்டிருந்தன. அருட்தந்தை ஆனந்தன் இந்த எல்லாப் பாடல் குழுக்களையும் இணைத்து அவற்றுக்கு ஒத்திகை பார்த்து இத்தியானத்தை நடத்தினார். கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் தமிழ் இளைஞர்களுக்கு பொறுப்பான அருட்தந்தை ஆனந்தன் பெர்னான்டோ புள்ளே அவர்கள் இந்த இளைஞர் குழுவுக்கு இதை ஒழுங்கு செய்ய ஊக்கம் அளித்து வழிகாட்டியாக இருந்தார். பல பங்குகளைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றிணைந்து தங்கள் நிர்வாகத் திறமையையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்திய ஒரு சந்தர்ப்பமாகவும் இது தென்பட்டது. வட கொழும்பு மிஷனரி இளைஞர் பொறுப்புக் குழு அருட்தந்தை ஒனாசியஸ் பெர்னாண்டோ அவர்களும் இந் நிகழ்வுக்கு தன் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்ததை அவதானிக்க முடிந்தது.

10ம் திகதி மாலை கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் அன்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமை தாங்க மாலை 4.30 மணிக்கு இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. சரியாக 2 மணி நேரம் தொடர்ந்த இந்த பாடல் தியானம் சோர்வின்றி மக்களின் பக்தி கலந்த பங்களிப்பு இந் நிகழ்வுக்கு மேலும் மேலும் இளைஞர்களுக்கு ஊக்கம் ஊட்டியது. ஒவ்வொரு பாடல் குழுவுக்கு இரண்டு பாடல் கொடுக்கப்பட்டிருந்தது. இரண்டு பாடல்களும் ஒரே கருத்தை ஒட்டியதாக அமைக்கப்பட்டிருந்தது. ஆவிக்கான பாடல், மன்னிப்புப் பாடல், எதிர்பார்ப்புப் பாடல், இறை அன்பில் உறுதி பெறும் பாடல், தூய ஆவியில் நிறையும் பாடல்கள் என வகைப்படுத்தப்பட்டிருந்தது.

**“ஆவியில் நிறைவோம்”** என்ற தலைப்புடன் நடாத்தப்பட்ட இந்த பாடல் தியானம் எம் மக்களுக்கு ஒரு புதிய அனுபவமாகவே இருந்தது துணை ஆயரின் மறை உரை, அருட்தந்தை ஆனந்தன், அருட்தந்தை பிரகாஸ் அவர்களின் செபங்கள், பாடல் குழாம்களின் இனிமை மிக குரல் பலம், இளைஞர்களின் நேர்த்தியான முகாமைத்துவம் ஒரு வெற்றியே.

இறுதியில் தேவநற்கருணை ஆசீரும் 2025 ஆண்டுக்கான ஜுபிலி கீதத்தை அனைத்து பாடல் குழாம்களும் (60 பேர்) இணைந்து வழங்க இத் தியானம் இறையாசீருடன் முடிவுக்கு வந்தது.

**- எனஸ்டன் -**



“நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படி கட்டளையிடும்”













தவக்காலத்தில் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்ற கொழும்பு பெரிய சிலுவை பாதையானது 9.3.2025 அன்று கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் அதி. வண. மெல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலும், துணை ஆயர் மேதகு என்டன் ரஞ்சித் ஆண்டகையின் வழி நடத்தலிலும் நடைபெற்றது.

கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னையர் தியானமானது மருதானை புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் 12.04.2025 அன்று நடைபெற்றது. இதனை மன்றத்தின் கனிஷ்ட பெண்கள் குழுவினர் ஒழுங்கு செய்தனர்.










கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க தமிழ் இளைஞர் மன்றம்
"ஆவியில் நிறைவோம்"
என்ற கருப்பொருளில் ஏற்பாடு செய்த பாடல் தியானத்தின் சில காட்சிகள்....
மேலதிக விபரங்களுக்கு பக்கம் 10ஐ பார்க்கவும்



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நற்செய்தி பெருவிழாவின் திருவிழிப்பு ஆராதனை செக்கடித்தெரு, அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் 5. 7.2025 அன்று நடைபெற்றது. இதனை அருட்தந்தை ரஜீவன் அடிகளார் வழிநடத்தினார்கள்.



"மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது"

### கொழும்பு கொச்சிக்கடை

## புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா 13.06.2025






புனித வியாகுல அன்னை ஆலய பங்கில் 28.6.2025 அன்று முதல் தேவநற்கருணை பெற்ற சிறார்களை படத்தில் காணலாம்.







கொழும்பு, தெமட்டகொட
புனித அந்தோணியார் ஆலய திருவிழா
29.6.2025 அன்று நடைபெற்றது.





"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்." (2 திமொ 4 : 7)

தோற்றம்
16 ✠ 04 ✠ 1958



மறைவு
16 ✠ 06 ✠ 2025

# திருமதி. கோமதி ஜோன்

(கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்ற உறுப்பினர்)

நீங்கள் செய்த அனைத்துப் பணிகளுக்கும்
நன்றி கூறுகின்றோம்.
இறைவன் உங்களுக்கு நித்திய இளைப்பாற்றியை
அருளவும் வேண்டுகிறோம்.

கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்



துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.

# நல்லாயன் இதயத்தில்
## சிறுமந்தையாய்......

உம் சிந்தையில் எனை நினைத்தீர்
உம் பாச உறவில் எனை அரவணைத்தீர்
சிறுமந்தையாய் உம் தோளில் எனை சுமந்துகொண்டீர்
நான் நலம் வாழ நின் உயிரையே தந்து நின்றீர்
நான் நலிவுறாது நான் களைப்புறாது
காப்பவரே என் நல்ல ஆயனே
நன்றிப்பாமாலை பாடிடுவேன்
உம் மாட்சியை நானும் பறைசாற்றுவேன்

செழிப்பான புல்வெளி வளமான நீர்நிலை
என் வாழ்வுக்கு உயிர் ஊட்டும் உம் பேரன்பே
இருள்சூழ்ந்த என் வாழ்வில் ஒளியாக வழிகாட்டும் நெடுங்கழியும் கோலும்
உன் கருணையே
இறைசித்தம் நிறைவேற்ற புடைசூழும் உன் அருள்நலமே
உம் இல்லம் நான் வாழ்ந்தால் எனை ஆளும் உம் வளமே

சாவின் இருள் பள்ளத்தாக்கில் விழுந்த என்னை தூக்கிவிட்டீர்
என் பகைவர் கண்முன்னே எனை உயர்த்தி விருந்து தந்தீர்

இறைவாழ்வில் மகிழ்ந்து களிக்க
என் தலையில் தைலம் பூசுகின்றீர்
அருள்பாத்திரம் நிரம்பி
வழிந்து உம் மாட்சியை பறைசாற்றுமே

நல்லாயன் இதயமே
நான் இளைப்பாறும் நல் இருப்பிடமே
இனிய உம்அரவணைப்பில் என் காயம் ஆறிடுமே
எனை தேடும் உம் அன்பால்
என் வாழ்வு மாறிடுமே
இனிய இதயமே
நல்லாயன் இதயமே
நன்றிப் பாமாலை நான் பாடுவேன்
உம் மாட்சியை நானும் பறைசாற்றுவேன்



- செல்வி த. மேரி பற்றீசியா -

# நாம் காத்திருக்கும் மாட்சியில் பங்கு கொள்ள...

*"இப்போது மானிடமகன் மாட்சி பெற்றுள்ளார். அவர் வழியாகக் கடவுளும் மாட்சி பெற்றுள்ளார்."*
*(யோவான்13:31)*



மனித வாழ்க்கையில் இறப்பு என்பது யதார்த்தமானதும், எதிர்பார்க்கப்படுவதுமாக இருந்தாலும் அது மனிதர்களால் விரும்பப்படுவது இல்லை. இறப்பு இழப்பையும், துயரத்தையும் ஏற்படுத்துகின்றது. ஆனால் நமது நம்பிக்கையின் அடிப்படையில் நாம் காத்திருக்கும் மாட்சியில் பங்கு கொள்வதற்கான வழியாக மரணம் இருக்கின்றது. இயேசுவின் மரணம் உடனடியாக சீடர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவும், துயரம் நிறைந்த அனுபவமாகவும், எதிர்பார்ப்புகள் அனைத்துமே சிதைந்து போன வெறுமையின் அனுபவமாகவும் இருக்கின்றது. இருப்பினும் இயேசுவின் உயிர்ப்பு அவர்களுக்கு நம்ப முடியாத ஒன்றாகவும் அதிர்ச்சியை கொடுத்ததாகவும் தொடர்ந்தும் இறப்பின் துயரத்தோடு அவர்கள் இருப்பதையும் நாம் பார்க்கின்றோம். எம்மாவுஸ்க்கு நடந்து பயணம் செய்த சீடர்களோடு உயிர்த்த இயேசுவும் ஒரு பயணியாக அவர்களின் உரையாடலில் ஒன்றிணைகின்றார். சீடர்களின் உரையாடலில் அவர்களின் துயரத்தையும் இழப்பின் வெளிப்பாடுகளையும் எல்லாம் முடிந்து விட்டது என்கின்ற உணர்வும் இருப்பதை நாம் அவதானிக்க முடியும். ஆனால் அந்த சீடர்களுக்கு இயேசு இறை வார்த்தையை விளக்கிய பொழுது இயேசு உயிர்த்து விட்டார் என்கின்ற உண்மையை புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டவர்களாக மீண்டும் எருசலேமுக்கு திரும்புகின்றார்கள்.

இவ்வாறு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோன்றிய உயிர்த்த இயேசு இறப்பின் மூலம் தான் பரம தந்தையால் மாட்சிப் படுத்தப்பட்டு இருக்கின்றார் என்பதையும், இதனால் பரம தந்தையும் மாட்சிப் படுத்தப்படுகின்றார் என்பதையும் புரிய வைக்கின்றார். இறைமகன் இயேசு சாவை தேர்ந்து கொண்டதன் ஊடாக இறப்பிற்கு புதிய பார்வையையும், புரிதலையும் கொடுக்கின்றார். அதாவது இறைமகன் கிறிஸ்து பாடுகளையும், மரணத்தையும் ஏற்றுக்கொள்ள தீர்மானித்தது மரணத்தை வேறு ஒரு கோணத்தில் நோக்குவதற்கு ஏதுவாக அமைந்திருக்கின்றது. இயேசுவின் மரணம் உலகியல் பார்வையில் கொடூரமானதும் ஏற்றுக்கொள்ள முடியாததும் ஆகும். மரணம் துயரம் நிறைந்த ஒன்றாக அல்லது அழிவு என்பதற்கு அப்பால் மரணம் ஒரு உன்னதமான மாட்சிக்கு நமது ஆன்மாவை இட்டுச் செல்கின்றது. விண்ணக வாழ்விற்கு நம்மை கொண்டு செல்கிறது. இயேசுவின் இவ்வுலக வாழ்வு கொடூரமான பாடுகள் மரணத்தில் முடிவுற்றாலும் அவரது வாழ்வின் தாக்கம் சீடர்களில் செயலாற்ற தொடங்குகின்றது. மரணத்தால் பயந்து போன சீடர்கள் இயேசுவின் உயிர்ப்பினால் புதிய உத்வேகம் கொண்டு நற்செய்தியின் சாட்சிகளாக தம்மை அர்ப்பணிக்க முழுமையாக முன் வருகின்றார்கள். கிறிஸ்துவின் உயிர்ப்புக்குப் பின்னரான சீடர்களின் வாழ்வு முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகவும், இயேசு கொடுத்த அன்பு கட்டளையை வாழ்வதாகவும், எடுத்துரைப்பதாகவும் அமைகின்றது. இவ்வாழ்வு பல சவால்கள் நிறைந்ததாகவும், காட்டிக்கொடுப்புக்கள் ஏமாற்றங்கள் துன்புறுத்தல்கள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. இருப்பினும், இறைவனுடைய அன்பின் கரம் சீடர்களோடு இருந்ததன் விளைவும், தூய ஆவியானவரினுடைய செயற்பாடும் ஆதி கிறிஸ்தவ சமூகத்தை இயேசு கொடுத்த புதிய கட்டளையாகிய அன்பு கட்டளையை நிறைவாக வாழ்வதற்கு ஏதுவாக அமைந்ததைப் பார்க்கின்றோம்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

அருட்தந்தை அ.வி. அல்பிரெட் அ.ம.தி.



தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.

# வானிலிருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவு

இயேசுவின் திரு உடல், திரு இரத்த பெருவிழா, 13ம் நூற்றாண்டிலிருந்து பெரு மகிழ்ச்சியுடனும், கோலாகலத்துடனும் கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. அனைத்து புனிதர்களின் திருநாட்களை விட மிக மிக உன்னதமான பெருவிழா இதுவாகும். திராட்சை ரசத்தில் ஒரு துளி தண்ணீர் கலந்து எவ்வாறு அதுவும் இரசமாக மாறுகிறதோ, அதுபோலவே எமது எளிய வாழ்வும், இயேசுவின் இறை வாழ்வுடன் கலந்து, அவரது சாயலாக மாற்றம் பெறுகிறோம். இதுவே புதிய உடன்படிக்கை. இயேசுவின் ஒட்டு மொத்த வாழ்க்கையை உற்று நோக்கினால், அவரது வாழ்வு நற்கருணையில் ஆரம்பித்து நற்கருணையில் முடிகிறதை அவதானிக்கலாம்.

இயேசு பெத்லகேமில் பிறந்த போது. அவரை தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதை கண்டார்கள். (லூக்2:16) தீவனத் தொட்டி என்பது கால் நடைகளுக்கு உணவளிக்கும் தொட்டி, தன்னையே உணவாக்கி மக்களுக்கு வழங்குவார் என்பதற்கு அடையாளமாக இதை கொள்ளலாம். தனது




அந்திம காலத்தில், இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில், அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அதை பிட்டு

***"இது உங்களுக்கான என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்"*** என்றார் அப்படியே உணவருந்திய பின் கிண்ணத்தையும் எடுத்து.

***"இந்த கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இதை செய்யுங்கள்"*** என்றார். (1 கொரி11:23-25) மறு நாளே சிலுவை மரத்தில் தன் உலக வாழ்வை முடித்துக் கொண்டார்.

மனித வாழ்வின் நலனுக்காக கடவுள் தன் மகன் வழியாக உலகுக்கு அளித்த பெரும் கொடைதான் நற்கருணை புனித அகுஸ்தீனார்,

***"கடவுளுக்கு ஒரே ஒரு விஷயம் தான் தெரியாதிருந்தது. தன்னைவிட பெரிதாக மக்களுக்கு எதைக் கொடுக்கலாம் என்பது. இறைவன் தன்னையே பலியாகத் தரும் மிகப் பெரும் கொடையாக, தன்னையே உள்ளடக்கிய நற்கருணையை ஏற்படுத்தினார். நற்கருணையை விட ஒரு மேலான கொடையை கடவுளால் கொடுத்திருக்க முடியாது"*** என்றார்? இதையே திருத்தந்தை 6ம் பவுல் தனது சுற்று நிருபம் ஒன்றில்,

***"திரு அவை கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட உன்னதமான உயர்வான கொடை நற்கருணையே"*** என்று கூறியிருக்கிறார்.

தேவ நற்கருணையில் உண்மையாகவே இயேசு எழுந்தருளியிருக்கிறார். என்பதை எமது ஞானக்கண்ணால் கண்டுணர்ந்து, அதற்குரிய மரியாதையையும், கௌரவத்தையும் கொடுப்போமேயானால் இறைவனின் பிரசன்னம் மூலம் ஏராளமான பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை அடிக்கடி நாம் நற்கருணையை உட்கொள்ளும் போது இயேசுவின் திருவுடல் எமது உடலுடன் கலந்து இயேசுவின் உடலாகவே மாற்றம் பெறுகிறது. எமது இதயத்தை அவரது இல்லமாக குடியிருக்க இடம் கொடுப்போமேயானால், இறைவன் எம்மோடு இருக்கிறார் என்ற பெருமிதத்துடன் பயமின்றி வாழலாம். எதற்கும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. பாவத்தை விலக்கி புண்ணிய காரியங்களில் ஈடுபட்டு, நற்கருணையில் உண்மையாகவே இயேசு பிரசன்னமாகியிருக்கிறார் என்ற விசுவாசத்துடன் நற்கருணையை உட்கொண்டு சுபீட்சமாக வாழ்வோம்.

– ஜெயக்குமார் பெர்னாண்டோ –

# கர்தினால் மெல்கம் ரஞ்சித்

கார்டினல் ஆல்பர்ட் மெல்கம் ரஞ்சித் அவர்கள், இலங்கையின் பொல்கஹாவெலயில் நவம்பர் 15, 1947 அன்று பட்டபெண்டிகே டான் வில்லியம் மற்றும் ஹெட்டியாராச்சிகே மேரி வினிஃப்ரெட் பெரேரா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். அவர் மூன்று சகோதரிகளைக் கொண்ட நான்கு உடன்பிறப்புகளில் மூத்தவர். அவரது ஆரம்பக் கல்வி ரோமன் கத்தோலிக்க ஆண்கள் பள்ளியிலும், கொழும்பு 15 லுனுபொக்குனவில் உள்ள டி லா சால் கல்லூரியிலும் கல்வி கற்றார். பின்னர் அவர் பொறல்லயில் உள்ள புனித அலோசியஸ் செமினரியில் சேர்ந்து கண்டியின் அம்பிட்டியவில் உள்ள தேசிய செமினரியில் தனது படிப்பைத் தொடர்ந்தார்.

## கல்வி மற்றும் இறையியல் உருவாக்கம்

உரோமில் உள்ள அர்பன் பல்கலைக்கழகத்தில் இறையியலில் இளங்கலைப் பட்டம் (B.Th.) பெற்றுள்ளார், அங்கு அவர் 1974 இல் சுமா கம் லாட் ப்ரோபாட்டஸ் பட்டம் பெற்றார். 1975 ஜூன் 29 அன்று ரோமில் உள்ள செயிண்ட் பீட்டர்ஸ் பசிலிக்காவில் திருத்தந்தை 6ம் சின்னப்பர் அவர்களால் குருத்துவ நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர் திருவிவிலிய இறையியலில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். ஜெருசலேம் எபிரேய பல்கலைக்கழகத்தில் திருவிவிலிய படிப்பில் டிப்ளோமா பட்டம் பெற்றார், பின்னர் ரோமில் உள்ள போன்டிஃபிகல் பைபிள் நிறுவனத்தில் புனித வேதாகமத்தில் உரிமம் (L.S.S.) பெற்றார், அங்கு அவர் மாக்னா கம் லாட் ப்ரோபாட்டஸில் பட்டம் பெற்றார்.

## ஆரம்பகால குருத்துவ ஊழியம்

கர்தினால் ரஞ்சித் அவர்கள், 1978 ஆம் ஆண்டு, பமுனுகம, கெப்புங்கோட மற்றும் டங்கல்பிட்டிய ஆகிய இடங்களில் உதவி பங்குத் தந்தையாக தனது பணியைத் தொடங்கினார். பின்னர், 1980 ஆம் ஆண்டு தஹாம் செவனாவில் ஆன்மீக இயக்குநராகப் பணியாற்றினார். பின்னர், 1981 ஆம் ஆண்டு பயாகல பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். இறையியல் கல்விக்கான அவரது அர்ப்பணிப்பினால் களுத்துறை மியூசியஸ் பயிற்சிக் கல்லூரியில் மத போதனையியல் விரிவுரையாளராகவும், கொழும்பில் உள்ள சிங்கள இறையியல் பீடத்தில் திருவிவிலிய பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

## ஆயர் ஊழியம்

17 ஜூன் 1991 அன்று, போப் இரண்டாம் ஜான் பால் அவரை கொழும்பின் துணை ஆயராகவும், கபார்சுசியின் பெயரிடப்பட்ட ஆயராகவும் நியமித்தார். அவரது ஆயர் நியமனம் ஆகஸ்ட் 31, 1991 அன்று தேவத்தை, லங்கா லேடி பசிலிக்காவில் பேராயர் நிக்கோலஸ் மார்கஸ் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது. 1995 ஆம் ஆண்டில், அவர் இரத்தினபுரியின் ஆயராக நியமிக்கப்பட்டார், அங்கு அவர் 2001 வரை பணியாற்றினார், மேலும் இலங்கையின் கத்தோலிக்க ஆயர் பேரவையில் முக்கிய பதவிகளையும் வகித்தார்.

## வத்திக்கானில் சேவை

2001 ஆம் ஆண்டில், அவர் வத்திக்கானில் உள்ள மக்களின் நற்செய்தி அறிவிப்புக்கான சபையின் துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டார், பின்னர் போன்டிஃபிகல் மிஷன் சங்கங்களின் தலைவரானார். 2004 ஆம் ஆண்டில், அவர் இந்தோனேசியா மற்றும் கிழக்கு தீமோர் நாடுகளில் திருத்தந்தையின் தூதுவராக பணியாற்றினார். மற்றும் உம்ப்ரியாட்டிகோவின் பேராயராக பதவி உயர்வு பெற்றார். வழிபாட்டு முறைகளில் அவரது நிபுணத்துவம் 2005 ஆம் ஆண்டில் வழிபாடு மற்றும் திருவிருந்துகளின் ஒழுக்கத்திற்கான சபையின் செயலாளராக நியமிக்கப்பட வழிவகுத்தது, அவர் 2009 வரை அந்தப் பதவியை வகித்தார்.

## கொழும்பு பேராயர் மற்றும் கார்டினலேட்

ஜூன் 16, 2009 அன்று, அவர் கொழும்பின் 9வது பேராயராக நியமிக்கப்பட்டார் மற்றும் ஆகஸ்ட் 5, 2009 அன்று கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் அதிகாரப்பூர்வமாகப் பதவியேற்றார். திருச்சபைக்கு அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை அங்கீகரித்து, திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர், நவம்பர் 20, 2010 அன்று அவரை கார்டினல் பதவிக்கு உயர்த்தினார், லூசினாவில் உள்ள சான் லோரென்சோவின் கார்டினல் - குருவானவர் என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினார்.

## தலைமைத்துவம், பங்களிப்புகள் மற்றும் கௌரவங்கள்

கார்டினல் ரஞ்சித் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதவான் ஆவார், மேலும் சபரகமுவ மாநில பல்கலைக்கழக கவுன்சிலில் பணியாற்றியுள்ளார். அவர் சிங்களம், ஆங்கிலம், தமிழ், ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ஸ்பானிஷ் மற்றும் இந்தோனேசிய மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர். தனது பணிக்காலம் முழுவதும், ஆசிய ஆயர் மாநாடுகளின் கூட்டமைப்பில் (FABC), குறிப்பாக திருவிவிலியம் மற்றும் வழிபாட்டு அலுவலகத்தில் செல்வாக்கு மிக்க குரலாக இருந்து வருகிறார். கலிபோர்னியாவின் தோமஸ் அக்வினாஸ் கல்லூரியில் இருந்து மதக் கல்விக்கான தோமஸ் அக்வினாஸ் பதக்கம் மற்றும் கலாச்சார சாதனைகளுக்காக இத்தாலிய ஜனாதிபதியிடமிருந்து கியூசெப் சியாக்கா சர்வதேச விருது உள்ளிட்ட சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

## வெளியீடுகள் மற்றும் மரபு

கார்டினல் ரஞ்சித், டிடீஎன் பப்ளிகேஷன்ஸ் கொழும்பால் வெளியிடப்பட்ட "பென்டாட்டூச் அறிமுகம்" (சிங்களம்) உள்ளிட்ட இறையியல் படைப்புகளை எழுதியுள்ளார். அவரது தலைமை விசுவாசிகளை தொடர்ந்து ஊக்குவித்து, கொழும்பு மறைமாவட்டத்தை நம்பிக்கை, சேவை மற்றும் திருச்சபையின் பணிக்கான அர்ப்பணிப்பில் வழிநடத்துகிறது.

– சுபா டேவிட் –

கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

## உரோமையர் 10ஆம் அதிகாரம் "நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துனை அழகாய் இருக்கின்றன"

இயேசுகிறிஸ்துவின் வார்த்தையாகிய நற்செய்தியை உலகம் முடியும்வரை பறைசாற்றுவது எமது தலையான கடமை. அனைத்துமக்களும் மீட்படைய வேண்டும் என்பதே இறைவனின் திருவுளம். மீட்பு அனைவருக்கும் உரியது. நற்செய்தியை அறிவிப்பவர்களை நம்புவதை விடுத்து அறிவிக்கப்படும் இறைவார்த்தையை கேட்டு அதனை விசுவசித்து ஏற்றுக்கொள்ளும்போதே நாம் நிறைவாழ்வைப் பெறுகின்றோம். அந்த வாழ்வுதரும் வார்த்தையின்படி நாம் வாழும்போது நாம் நிலைவாழ்வை அடையும் பாக்கியம் பெறுகின்றோம். இறைவனின் வார்த்தை எமது அருகிலும், எமது உள்ளத்திலும், எமது வாயிலும் இருக்கவேண்டும். வெறும் வாய்வார்த்தையால் மாத்திரம் நாம் இறைவனை நெருங்க முடியாது. தங்கள் எண்ணங்களின்படி எனக்குக்



கீழ்ப்படியாமல் நடக்கும் கலகக்கார மக்களினத்தின்மீது நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன் என்று இறைவன் கூறுகிறார். "கடவுள் எங்களுக்கு மட்டுமே உரியவர். நாங்கள் மாத்திரமே பிறப்பிலிருந்து கிறிஸ்தவர்கள். எனவே நாங்கள் அனைத்தையுமே அறிந்திருக்கிறோம் என்று இறுமாப்புக்கொள்வோர் மீது இறைவன் சினம் கொள்கிறார். அவரைத் தேடாதவர்கள் அவரைக்கண்டடையவும் அவரை நாடாதவர்களுக்கு அவரை வெளிப்படுத்தவும் இறைவன் இசைந்துள்ளார்" எனவே அவரது மீட்பின் பணிக்கு எம்மை முழுமையாக அர்ப்பணித்து உண்மையான கிறிஸ்துவின் சாட்சிகளாய் என்றென்றும் வாழ்வோம்.

**தொடரும்.**

**– திருமதி. கோமஸ் –**



## ரோசா மிஸ்டிகா அன்னை திருவிழா

**ஜூலை 13ஆம் திகதி அன்னையாம் திருச்சபையானவள் ரோசா மிஸ்டிகா அன்னையின் திருவிழாவை நினைவு கூறுகின்றது. அன்றைய தினம் திருச்செபமாலை ஓதி அன்னையின் பரிந்துரையை பெற நாம் அழைக்கப்படுகின்றோம்.**

# பைபிள் ஹீரோக்கள்

20

தொடர்ச்சி.....

## சிறுவர்களே! உங்களுக்காக

ஆக்கம் : இவஞ்ஜலிஸ்டா வினோலிசன்

# சிம்சோன்



சிம்சோன் திமினாவில் இருந்த பெலிஸ்திய பெண்ணை திருமணம் செய்ய விரும்பினார். அவரை பெண் பார்க்க தன் பெற்றோரை அழைத்துச் சென்றார்.

போகும் வழியில் தம் மீது பாய்ந்த சிங்கத்தை ஆட்டை இரண்டாக கிழிப்பது போல கிழித்து போட்டார். ஆண்டவருடைய ஆற்றலால் அவர் ஒரு பெரு வீரனாக காணப்பட்டார்.





அப்பெண்ணின் தந்தையோ வேறொருவருக்கு அவளை மணம் முடித்து கொடுத்ததால் கோபம் கொண்டு நரிகளின் வால்களில் தீமூட்டி, பெலிஸ்தியரின் பயிர்களை எரித்து போட்டார்.



அதன் பின்னர் தெலீலா எனும் பெண்ணை மணந்தார். அவள் சிம்சோனின் பேராற்றல் எதில் உள்ளது எனக் கேட்டு, நச்சரித்தாள்.



அவரோ தாம் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவன் என்றும் அவரது பலம் தலைமயிரில் இருப்பதாக கூற, அவள் அவருடைய தலைமயிரை வெட்ட, அவர் தம் பலம் அனைத்தையும் இழந்து போனார்.



பெலிஸ்தியர் அவரை ஒரு தூணில் கட்ட, ஆண்டவரிடம் தம் பலத்தை தரும்படி மன்றாடி, 'என் உயிர் பெலிஸ்தியரோடு மடியட்டும்' என்று கூறி முழு வலிமையோடு தாம் கட்டப்பட்ட கரங்களை இழுக்க, தூணோடு சரிந்து விழ அவரும் பல பெலிஸ்தியரும் மாண்டனர்.



அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**இடமிருந்து வலம்**

1 - இயேசுவின் சீடர்கள்

19 - பத்து கட்டளைகளை மோயீசன் அதிலே எழுதினார்.

32 - மரம் வளர மண்ணில் இது வேண்டும்.

35 - “கண்” என்றும் கூறலாம்.

**மேலிருந்து கீழ்**

1 : விண்ணகத்தின் மறுபெயர் இது.

3 : மார்கழி மாதத்தில் குளிரோடு இதுவிழும். (தலைகீழ்)

6 : காணாமல் போன இதனை ஆயன் தேடி அலைந்தார். (தலைகீழ்)

16 : “சாத்தான்” என்றும் அழைப்பர்.

30 : கடலுக்கு இன்னுமொரு பெயர்.

## குறுக்கெழுத்துப்போட்டி

**முன்னைய இதழின் விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. வானவில்
10. கடல்
13. நாக்கு
17. குழி
21. எமது
31. ஆடு

**மேலிருந்து கீழ்**

1. வாக்கு
4. கல்
6. படகு
11. எழில்
15. நாமம்
22. துணிவு
25. மடு
30. பசு

கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட
நற்செய்தி பெருவிழாவின் ஆயத்த வழிபாடானது
செக்கடித்தெரு,அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில்
4.7.2025 அன்று நடைபெற்றது.
இதனை கார்மேல் சபையை சேர்ந்த
அருட்தந்தை அஷோக் அடிகளார் வழிநடத்தினார்கள்.
நாம் ஏன் செபம் செய்ய வேண்டும்.
எவ்வாறு செபிப்பது என்பது பற்றிய விளக்கத்தினை
அருட்தந்தை அவர்கள் மிக அழகாக எடுத்துரைத்தார்கள்.





## “தாய்” வாசக நெஞ்சங்களே!

தற்போது **“தாய்”** சஞ்சிகையை
www.colombostjosephvazmandram.lk என்ற
இணையதளத்தின் ஊடாகவும் நீங்கள் காணலாம்
என்பதை அறியத் தருகின்றோம். இதன்மூலமாக
வெளிநாட்டில் உள்ளவர்களும்
இத் தாய் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

தம் சகோதரரையோ சகோதரியையோ “முட்டாளே” என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார்

செவிமடுத்தல்...

8ம் பக்க தொடர்ச்சி...

புனித இக்னேசியஸ் லொயலா கூறும் போது, “பேசுவதில் அவசரப்படாமலும், பிறருக்கு செவிமடுப்பதில் பொறுமை உள்ளவராகவும் இருப்போம். எம்மோடு உடன் பயணிப்பவர் தன்னிடமுள்ள அத்தனை விடயங்களையும் ஒளிவு மறைவின்றி பகிர எமது காதுகளை அகல திறந்து வைப்போம்” என்பார்.

செவிமடுத்தல் பிறரின் வெற்றியை இணைந்து கொண்டாடவும், தோல்விகளை திட்டமிட்டு வெற்றிகொள்ளவும் துணையாகின்றது. உளக் காயங்கள் செவிமடுத்தலால் குணமடைகின்றன. நாம் பலர் எமக்கு தெரிந்ததையும், அறிந்ததையும் உரக்கச் சொல்வதில் கர்வம் எடுப்பதுண்டு மாறாக பிறரது கருத்துக்களுக்கும், இறை அனுபவங்களுக்கும் செவிமடுக்க மறப்பதுண்டு.

**செவிமடுக்கும் கலையை வளர்த்துக்கொள்ள பின்வரும் விடயங்களை கற்றுக்கொள்வோம்.**

❖பிறருக்கு ஆலோசனைகளையும், கருத்துக்களையும், ஆறுதல்களையும் பகிரும் முன் அவர்களுக்கு பொறுமையுடன் செவிமடுப்போம்.

❖தீர்ப்பிடாமல் செவிமடுக்க முயல்வோம்.

❖யாருக்கு பொறுமையுடன் ஆழமாக செவிமடுக்கின்றோம். அவர் அக ரீதியான குணமாக்கலை பெற உதவி ஆகின்றோம்.

❖நேர்மையுடன் அவருக்கு செவிமடுத்து வழிகாட்டும் போது உண்மையான வழிகாட்டுதலைப் பெறுகின்றோம்.

❖செவிமடுப்பவரின் உண்மை நிலையை அறியும் போது அவரது வெற்றிகளை இணைந்து கொண்டாட துணையாகவும் மாறுகின்றோம்.

இது எமது உறவை, உரையாடலும், நட்பை ஆழப்படுத்தி, அர்த்தமுள்ளதாக்குகின்றது. இதயமும் இதயமும் பேச முனையும் போது அங்கு உறவும், உரையாடலும், நட்பும் ஆழம் பெறுகின்றது. பொறுமையுடன் பிறருக்கு செவிமடுத்து, அர்த்தமுள்ள உறவைப் பேணி ஆத்மார்த்தமான வாழ்வை வாழ்வோம்.

முற்றும்.

நாம் காத்திருக்கும்...

16ம் பக்க தொடர்ச்சி...

இறைவனின் அன்பை எடுத்துச் செல்லும் கருவிகளான இந்த சீடர்கள் வேத கலாபனையை எதிர் நோக்கினாலும், அதற்கும் மேலாக கடவுள் அன்பாய் இருக்கின்றார் என்கின்ற ஆழமான செய்தியை ஓங்கி ஒலிக்கச் செய்கின்றனர். இதனால் வன்முறைகள், எதிர்ப்புகள் பலமாக இருந்தாலும் நம்பிக்கையாளர் தொகை இவ் இடறல்களுக்கு மத்தியிலும் அதிகரிப்பதையும், சாட்சிய வாழ்வு வாழ்வதையும் நாம் திருத்தூதர் பணிநூலில் காண்கின்றோம்.

இவர்களுடைய எதிர்நோக்கு நிலையான விண்ணக மகிமை என்பதில் உறுதியாக இருந்தது. எனவே துன்பங்களையும், மரணத்தையும் விண்ணக மகிமைக்கான வாயிலாக நம்பினார்கள். அதுபோல பலி வாழ்வை அயலவருக்கான அன்பாக கொண்டார்கள் இதனால் மற்றவர்களுக்கு பணி புரிவதையும், பிழைகளை மன்னிப்பதையும், பாவிகளை நேசிப்பதையும் தேவையில் இருப்பவருக்கு இரக்கம் காட்டுவதையும் தம்முடைய வாழ்வியல் பண்பாக கொண்டனர். எனவே நிலையான விண்ணக ஆட்சியில் பங்கு கொள்ள காத்திருக்கும் நாம் தொடக்க கால கிறிஸ்தவர்கைளப் போல துன்பங்கைள மனமுவந்து ஏற்றுக் கொள்கிறவர்களாகவும் இயேசுவின் மனநிலையோடு அயலவர்களை அன்பு செய்கிறவர்களாகவும் நம் வாழ்வியல் சூழலை அமைத்துக் கொள்ள உறுதியான மனநிலையை ஏற்படுத்திக் கொள்வோம். நிலை வாழ்வை நோக்கி பயணிப்போம். இறை மாட்சியில் பங்கெடுப்போம்.

**உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள்; அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள் ஆனால், உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும். (யோவான் 16:20)**

அருட்தந்தை அ.வி. அல்பிரெட் அ.ம.தி.



“தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார்”

# 25 ஆண்டுகள் நினைவஞ்சலி

மண்ணில்
01
✠
12
✠
1954



விண்ணில்
09
✠
05
✠
2000

## குபேரன் பர்னாந்து

"இருபத்தைந்து ஆண்டுகள் போனாலும்
காணும் இடமெல்லாம் நீ
போகும் இடமெல்லாம் உன் பேச்சு
சென்ற இடமெல்லாம் உன் சேவை
எங்கள் உள்ளங்களில் ஓவியமாய் வாழ்கின்றாய்
உடலால் பிரிந்தாலும் எம்
உள்ளத்தில் நிலைத்து வாழ்கின்றாய்"

# 26 ஆண்டுகள் நினைவஞ்சலி

மண்ணில்
25
✠
05
✠
1925



விண்ணில்
05
✠
09
✠
1999

## திரேசம்மாள் டி குருஸ்

"இழந்தவன் தேடுவதும் இருப்பவன் தொலைப்பதும் தாயின் அன்பு"

# ANTON ENTERPRISES

Anton ENTERPRISES




No. 51, 59, 60. People's Park Shopping Complex,Colombo - 11.

Tel: 011-2541041, 011 4325243. Fax: 011 2440800. Frame Shop: 011 4325242.


"மறை வளர ஒன்றிணைவோம்"

இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 30.06.2025 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed by : JRCA Digital Graphic (Pvt) Ltd., No. 78, Brass Founder Street, Colombo - 13. :077 177 6646 : 075 777 6646